# தமிழ்நாடு தட்டச்சு கணினி பள்ளிகள் சங்கம்

(ஸ்தாபிதம். 2015)

மாதிரி தேர்வு - தமிழ் மேல்நிலை

நேரம் - 10 நிமிடங்கள் மதிப்பெண் - 100

கீழ்க்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில் 10 டிகிரி இடதுபுற மார்ஜின் விட்டு தட்டச்சு செய்யவும்.

---

கிராமப்புறங்களில் கால்நடை பராமரிப்புத் துறையின் முதுகெலும்பாக அமைந்துள்ள அமைந்துள்ள கால்நடை மருத்துவ சேவைக் கட்டமைப்பினை அரசு பெருமளவில் மேம்படுத்தியுள்ளது. கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கால்நடை நோய் தடுப்பு மருத்துவ நிறுவனத்தின் கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் பால் தேவையை மட்டும் பூர்த்தி செய்யாமல், அண்டை மாநிலங்களுக்கும் ஆவின் பால் நிறுவனம் மூலம் பால் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் ஆவின் பால் நிறுவனத்தின் அங்கத்தினர்களுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. பால் உற்பத்தி அதிகரிக்கும்போது வெண்மைப் புரட்சி ஏற்படும். குஜராத் மாநிலத்தில் உள்ள ஆனந்த் என்ற இடத்தில்தான் அதிக அளவில் பால் உற்பத்தி நடைபெற்று வருகிறது. அங்க பாலில் இருந்து பால் பவுடர் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. நல்ல தரமான முறையில் இங்கு மிகுந்த சுகாதாரமான முறையில் பால் பவுடர் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கால்நடைகள் பெரிதும் உதவியாக உள்ளன என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்காது. நிலத்தை உழுதிடவும், விளைவித்த பொருட்களை வயலில் இருந்து வீட்டுக்கு எடுத்து வருவதற்கு மாட்டு வண்டிகள் பெரிதும் உதவியாக உள்ளன. விவசாய விளை பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்லவும் மாட்டு வண்டிகள் உபயோகப்படுகின்றன. சுமார் 40 வருடங்களுக்கு முன்பு வரை கிராமங்களில் போக்குவரத்துக்கு மாட்டு வண்டிகளும் பொட்டு வண்டிகளும் பெரிதும் உதவியாக இருந்தன. இதனாலேயே கிராமங்களில் மாடுகளை வளர்ப்பார்கள். கால்நடைகள் மனிதனுக்கு எந்த அளவுக்கு பயன்படுகின்றன என்பதற்கு இவையெல்லாம் உதாரணங்கள். இன்றைக்கு போக்குவரத்துக்கு பல்வேறு டீசல் பெட்ரோல் வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் காற்று மாசு ஏற்பட்டு, மழை பொழிவு குறைந்துவிட்டது. இதனால் பல கிராமங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பது நிதர்சனமான உண்மை. மனித வாழ்க்கையில் இயற்கை முறையில் இருந்து எப்போது விலகினானோ அப்போதே மனிதனுக்கு பல வகை நோய்கள் தோன்ற ஆரம்பித்தன. அன்றைக்கு மருத்துவர்களும் குறைவு. மருத்துவமனைகளும் குறைவு. ஆனால் இன்றைய நிலைமை தலைகீழாக உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. நமக்கு நாமே வினைகளை ஏற்படுத்திக் கொண்டு விட்டோம். இதிலிருந்து மீள்வதுதான் எப்போது? மீள முடியுமா? என்பதுதான் இன்று உள்ள கேள்வி. கால்நடைகளை வளர்த்து விவசாயத்திற்கு பயன்படுத்தினால் மட்டும் போதாது. பழைய முறையில் குறைந்த தொலைவு பயணங்களுக்கு மாட்டு வண்டிகளை பயன்படுத்தினால் காற்று மாசு குறையக்கூடும். ஒவ்வொருவரும் இதை தமது கடமையாகக் கருத வேண்டும். இல்லாவிட்டால் எதிர்கால சந்ததிகளுக்கு நாம் பெரும் தீமையைச் செய்தவர்களாகிவிடுவோம் என்பதில் சற்றும் அய்யமில்லை. மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த காலங்கள் இனி வருமா என்பதுசந்தேகமே.இயற்கையைபாதுகாப்போம். நம் வாழ்க்கை முறையை மாற்றிடுவோம்.

# தமிழ்நாடு தட்டச்சு கணினி பள்ளிகள் சங்கம்.

(உருவாக்கம்-2015)

மாதிரி தேர்வு 2021 - தமிழ் மேல்நிலை

நேரம் - 1 மணி — மதிப்பெண்கள்-100

----

வினா எண்.1 — மதிப்பெண்.60

கீழ்க்கண்ட புள்ளி விவரப்பட்டியை தட்டச்சு செய்து கோடிடுக.

த.நா.வில் மாவட்ட வாரியாக கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் விவரம்.

| மாவட்டம் | முதியோர்கள் | | இளையோர்கள் | |
|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | பெண்கள் | ஆண்கள் |
| மதுரை | 30,148 | 25,150 | 12,147 | 13,149 |
| விருதுநகர் | 18,247 | 18,343 | 17,448 | 16,359 |
| வேலூர் | 22,767 | 21,365 | 20,549 | 14,360 |
| காஞ்சி | 18,194 | 18,244 | 18248 | 13267 |
| ஈரோடு | 20,955 | 15,499 | 17,348 | 12,656 |
| சேலம் | 19,1998 | 19,647 | 19368 | 12,495 |
| நீலகிரி | 8100 | 8050 | 17650 | 6300 |
| திருவாரூர் | 6550 | 5400 | 7954 | 5,655 |
| கடலூர் | 9,998 | 9,997 | 9,789 | 8,497 |
| நாமக்கல் | 6946 | 6450 | 6478 | 6750 |
| தஞ்சாவூர் | 18,100 | 18,200 | 16,300 | 17,499 |

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் விவரம் தரப்பட்டுள்ளது. மார்ச் மாதம் 31-ந்தேதி வரையிலான காலகட்டத்தில் பிற மாவட்டங்களில் இருந்து முழுமையான விவரங்கள் இதுவரை பெறப்படவில்லை.

—x—.

வினா எண் : 2 மதிப்பெண்கள் : 40

கீழ்க்கண்ட நேர்முகக் கடிதத்தை உரிய முறையில் தட்டச்சு செய்க.

த.நா. அரசு

பேரிடர் மேலாண்மைத்துறை

திரு.க. நாதன், இ.ஆ.ப.,
அரசு இணைச் செயலாளர்.
நே.மு.க. எண். 27-2/2020

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009.
நாள் 10 மார்ச் 2020.

திருh அன்புள்ளh உசேன்,

பொருள்: கொரோனா வைரஸ் பரவல் -
நடவடிக்கைகள் தடுப்பு - சார்ந்து

பார்வை: அரசு. ஆ. எண். 199/2020 பேரிடர்
மே. துறை, நாள் 28.2.2020.

---

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையில் அரசு
கொரோனா தடுப்பூசி போடுவது குறித்து விளக்கம்
தரப்பட்டுள்ளது. முதல்கட்டமாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு
தடுப்பூசி போட வலியுறுத்தப்பட்டுள்ளது. ⊗ மாவட்டத்தில்
இதுவரை எதிர்பார்த்த அளவிற்கு தடுப்பூசி போடப்படவில்லை.

2. இரண்டாம் கட்டமாக 45 வயதிற்கு மேல்
உள்ளவர்களுக்கும் தடுப்பூசி போடவேண்டி உள்ளது.
இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட தடுப்பூசி
மருந்துகள் மீதம் கைவசம் இருந்தால், அவற்றை
உள்ள அதிகாரியின் சிவகங்கை மாவட்டத்திற்கு அனுப்பி
வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நல்வாழ்த்துக்களுடன், தங்கள் அ... புள்ள,

(க. நாதன்)
அ. இ. செ.

⊗ இராமநாதபுரம்

பெறுநர்
திரு. மு. உசேன், இ.ஆ.ப.,
மா. ஆ. த.,
இராமநாதபுரம் மாவட்டம்.
நகல் மா. ஆ. த., சிவகங்கை மாவட்டம்